UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1981-4-27
PERIODICALS DIVISION

# உதயசூரியன்

UTHAYASURIYAN

விலை ரூபா 1-00

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 17-4-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 29

அச்சக இயந்திரக் கோளாறு காரணமாக இவ்வாரம் 'உதயசூரியன்' உரிய நேரத்தில் வெளிவர முடியவில்லை.

தாமதத்திற்கு வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்கின்றோம்.

- ஆர் -

## 'கதிர்' சொன்ன கடைசி வார்த்தை!

அமரர் சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் இந்தியாவுக்குப் புறப்படுமுன்- தலைவர் அமிர் உட்பட- திரு. வெ. யோகேஸ்வரன், பா. உ. திரு. இராசம்பந்தர், பா. உ., திரு. க. துரைரத்தினம், பா. உ., ஆகியோரை ஒரே நேரத்தில் கொழும்பில் சந்தித்து உரையாடுகையில்-

ஆனிமாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கும் அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் த. வி. கூட்டணியின் சார்பில் தகுதியான வேட்பாளரை நிறுத்தி- அனைத்து மாவட்டங்களையும் கைப்பற்ற வேண்டும்; ஐக்கிய தேசியக்கட்சி வடக்கில் ஓர் இடம்கூட எடுக்கவிடக் கூடாது.

இதுவே- மேற்படித் த. வி. கூ. தலைவர்களிடம் 'கதிர்' கடைசியாகக் கூறிய வார்த்தைகள்!

## 'குப்பை' விழுந்த கூடை!

தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து மட்டக்களப்பு இராசதுரை வெளியேறி யு. என். பி. யில் இணைந்ததும் அவரைக் 'குப்பை' என வர்ணித்தவர் சிந்தனைச் சிற்பி திரு. கதிரவேற்பிள்ளை அவர்கள்.

சிந்தனைச் சிற்பி சென்னையில் மறைந்ததும், அவரால் 'குப்பை' என வர்ணிக்கப்பட்ட இராசதுரைவிடுத்தமாமூல் செய்திக்குச் 'சுதந்திரன்' (5-4-81) இடம் கொடுத்து மகிழ்கிறது.

இதனால் — 'சுதந்திரன் என்ன குப்பைக் கூடையா?' என்று கேட்கின்றார்கள் விஷயமறிந்தவர்கள்!

# ஆனி 4 அழைக்கிறது! எழுகவே தமிழர் சேனை!

## 'உதயசூரியன்' ஒளி தமிழ் உலகை ஆளட்டும்!

'தமிழர் பூமியைக் காக்கத் தக்கதோர் அரண்' என அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் உயர்திரு. ஏ. ஜே. வில்சன் அவர்களால் போற்றப்படும் அபிவிருத்திச் சபைகள்- தமிழர் நலன் கருதி தனது காலத்திலேயே தந்தை செல்வா காண விரும்பிய அமைப்பு என்பதில் அணுவளவும் சந்தேகம் இல்லை.

ஒப்பந்தங்கள் எதுவும் இல்லாமலேயே உறுதியாகிவிட்ட இவ்வமைப்பு முறையை ஆரம்பத்தில் எதிர்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர்- இதில் தரப்பட்டுள்ள அதிகாரம் போதாது என சொல்லுகின்ற அளவுக்கு தங்கள் நிலையை மாற்றிக் கொண்டதிலிருந்தே இதன் முக்கியத்துவம் நன்கு புலனாகின்றது.

ஈழத் தமிழரின் உள்ளத்தில் ஒரு புது நம்பிக்கையை- எழுச்சியை உருவாக்கப் போகும் இவ்வபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் ஆனிமாதம் 4ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

இம்மாதம் 9ம் திகதி கொழும்பில் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழுவில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடுவதெனத் தீர்மானித்து, அதற்கான ஆக்கபூர்வமான வேலைகளில் இயக்கம் இப்போது ஈடுபட்டிருக்கின்றது.

இனத்தின் விடுதலைக்காகப் போரா(ர)டும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் குறிக்கோள் தேர்தல்களம் அல்ல! ஆனால்- தமிழர் பூமியைப் பாதுகாக்கும் பொறுப்பை எந்தக் காரணத்தைக் கொண்டும்- தமிழினவிரோதிகளின் கையில் தாரைவார்த்துக் கொடுத்து விடக் கூடாது என்ற உறுதிப்பாட்டினாலேயே அது தேர்தல் களத்தில் குதிக்கின்றது.

விடுதலைப் போராட்டத்தில், அபிவிருத்திச் சபைகள் ஒரு பெரும் கருவியாக விளங்கும் என்ற நம்பிக்கை நமக்கு அதிகமாகவே உண்டு.

இதனைத் தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் இதயத்தில் நன்றாகவே பதித்துக் கொண்டு எள்ளளவு தானும் நமக்குள்ளே இருக்கின்ற ஒற்றுமையைக் குலைத்து விடாமல் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் நமது இயக்கத்தின் வெற்றிப் பேரொலியே கேட்கும்படி செய்ய வேண்டும்.

1977ல் ஆடியில்-, அலை அலையாகத் தமிழர் சேனை திரண்டெழுந்தது போல- 'உதய சூரியன்' ஒளியே தமிழ் உலகமெங்கும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததுபோல- 1981 ஆனி நான்கிலும் அப்படியொரு அற்புதமான காட்சியை தமிழினம் படைத்துக் காட்ட வேண்டும்.

இன எழுச்சியும்- மொழி உணர்ச்சியும் நிறைந்த இளஞ் சமுதாயம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்லும்- இதில் நமக்கு முழுநம்பிக்கை உண்டு.

ஆம்- ஆனி நான்கு நம் எல்லோரையும் அழைக்கின்றது! அணி அணியாய்- அலை அலையாய் தமிழர் சேனை புறப்படட்டும்- இனத் துரோகிகள்- கொள்கைக் குழப்பவாதிகள் எட்டுத் திக்கும் சிதறி ஓடட்டும்!

## மீண்டும் ஒரு 1979

வடக்கில் பயங்கரவாத நடவடிக்கைகளை முழுமையாக முறியடிக்கும் நோக்குடன் பிரிட்டனில் விசேட விதமாகப் பயிற்சிபெற்ற இராணுவப்படையைஅனுப்பயு. என். பி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

இதனால் மீண்டும்ஒரு 1979ஐ சந்திக்க நேரிடுமா என்ற கேள்வி இங்கு பரபரப்பாகக் கேட்கப்படுகின்றது.

## சொன்னதும்; நடந்ததும்!

"எதிர்க் கட்சியினர் நடத்தும் கூட்டங்களில் நம்மவர் தலையிடவோ குழப்பவோ கூடாது"

— ஜே. ஆர்.

(அரசாங்கப் பாராளுமன்றக் கூட்டத்தில்)

* * *

"இரத்தினபுரியில் ஐந்து எதிர்க் கட்சிகள் நடத்திய கூட்டம் குழப்பத்தில் முடிந்தது"

(வீரகேசரி செய்தி 8-4-81)

## மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்தாரா?

அமரர் சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் தமது மனச்சாட்சிக்கு விரோதமாகவே அபிவிருத்திச்சபை அமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தார்என்று அரசு சார்பு ஏடு தினகரன் எழுதியதாக ஒருசெய்தியை, சுதந்திரன் (12-4-81) ஏடு வெளியிட்டுள்ளது.

அமரர் ஒரு பெருந்தகையாளர். தமது மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கக் கூடியவரல்ல. அவரைப்பற்றி அப்படியொரு செய்தியை அரசாங்கப்பத்திரிகை வெளியிட்டிருந்தாலும்-

அதனை- அமரர் கதிரவேற்பிள்ளையை நன்கு அறிந்த சுதந்திரன் ஏடுமா பகிரங்கப்படுத்தி அவரை சிறுமைப்படுத்த வேண்டும்?

# தமிழ் ஈழம் தமிழர் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழகத் தெரிவில் முஸ்லிம் மாணவர்களுக்குப் படுதுரோகம்!

இம்முறை இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதி முறையானது பெரும் அமளி துமளிகளுக்கு மத்தியில் ஒருவாறுக நிறைவேற்றப்பட்டுள்ளது. என்றாலும் முஸ்லிம் மாணவர்களை பொறுத்தமட்டில், தெரிவு முறையானது வருந்தத்தக்க விதத்தில் அமைந்து காணப்படுகின்றது.

இலங்கை பூராவிலிருந்தும் 5,400 மாணவர்கள் சகல துறைக்குமாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுள் மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 400 பேரில் முஸ்லிம் மாணவர்கள் 10 பேராகவே காணப்படுகின்றனர். பொறியியல்துறைக்கோ 10க்கும் குறைவானோரே

## தட்டிக் கேட்பவர்கள் த. வி. கூ. தலைவர்களே!

தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கலைப்பிரிவிற்கே 80 பேர் அளவில் தெரிவு செய்யப்பட்டுள்ளது அறியக் கிடைக்கின்றது.

இதன் அடிப்படையில் நோக்கும்போது முஸ்லிம் மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகத்துக்கு 3%க்கும் குறைவான அளவிலேயே தெரிவாகியுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்களுள் அநேகர் தொழில் வாய்ப்புகள் ஏதுமற்ற துறைகளுக்கே தெரிவானதால் பல்கலைக்கழகம் செல்லுவதற்கு விண்ணப்பிக்காது தயங்கி நிற்கின்றனர்.

பல்கலைக்கழகத் தெரிவிலே தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தினர்கள் அக்கறையோடு கவனித்து வருகின்றதனைக் காண்கின்றோம். அதனை நாம் வரவேற்கின்றோம். அதே நேரத்தில் முஸ்லிம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை எடுத்துக்காட்டிக் குரல் கொடுக்க வேண்டியவர்கள் எதுவித அசைவுமின்றி காணப்படுகின்றனர். அத்துடன் தெருவுக்குத்தெரு மலிந்துள்ள முஸ்லிம் இயக்கங்கள் கூட எந்தவிதமான சிரத்தையுமின்றி வாய்மூடிமௌனிகளாக மாறியுள்ளன. இந்த இயக்கங்களும், இத்தகையவர்களும்தான சமுகத்தை நிர்மாணிக்க வந்த செம்மல்கள்.

சமீபத்தில் ஒரு முஸ்லிம் நபர் (ஆயினும் இவர் ஓர் அரசியல் வாதியல்லர்) ஜனாதிபதியை சந்தித்து முஸ்லிம் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில் 8% கொடுக்க வேண்டும். என்று கேட்டுள்ளார். ஜனாதிபதியவர்களோ அந்நபரிடம் எதையும் கேளுங்கள் கொடுக்கின்றேன்; ஆயினும் இனரீதியாக எதையும் கேட்க வேண்டாமென்று பதிலளித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரமொன்றிலிருந்து நமக்கு தகவல் கிடைத்துள்ளது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## "அல்-ஹக்கீகா" கண்டனமும் - பாராட்டும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## பரிதாபத்துக்குரிய மாணவர்கள்

மட்டக்களப்பு ஏறாவூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கட்டட வசதியின்மையினாலும் ஆசிரியர் பற்றாக்குறையினாலும், அங்கே கல்வி கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

முன்பு இப்பாடசாலையில் மூன்றுகட்டடங்கள் இருந்தன. சூறாவளியால் அவை தரை மட்டமாக்கப்பட்டபின், சீரழிந்த ஓலைக் கொட்டில்களிலே இன்னும் தொடர்ந்து வகுப்புக்கள் நடை பெறுகின்றன.

பாடசாலையில் தளபாடப் பற்றாக்குறையும் நிலவுவது குறிப்பிடத் தக்கது.

## இலண்டனில் நமது இயக்கம்!

இலண்டன் மாநகரில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை அண்மையில் செயற்பட ஆரம்பித்துள்ளது. இலண்டனிலிருந்து தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களாகச் சேருவதற்கு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் இயக்கச் செயற்குழுவில் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு அங்கு ஓர் அலுவலகம் அமைக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் நியமனக்குழுவின் மாவட்ட விஜயம்!

அபிவிருத்திச் சபைத் தேர்தலில் த. வி. கூட்டணியின் சார்பில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் பொருட்டு, த. வி. கூட்டணியின் வேட்பாளர் நியமனக்குழு மாவட்டம் தோறும் பின்வரும் நாட்களில் விஜயம் செய்யவிருக்கின்றது.

18-4-81 யாழ்ப்பாணம் மாவட்டம்
நேரம், பி.ப 3 மணி,
இடம்: தலைவர் சிவா, அலுவலகம், திருநெல்வேலி

21. 4. 81 அம்பாறை மாவட்டம்
நேரம், மு.ப 10 மணி,
இடம்: பொ.வ கந்தையாவின் இல்லம், கல்முனை.

21. 4. 81 மட்டக்களப்பு மாவட்டம்
நேரம், பி.ப 3 மணி
இடம்: திரு.பூ. கணேசலிங்கம் பா. உ. இன் இல்லம், மட்டக்களப்பு.

22. 4. 81 திருக்கோணமலை மாவட்டம்
நேரம், மு.ப 10 மணி,
இடம்: திரு. இரா. சம்பந்தர், பா. உ. வின் இல்லம்.

22. 4. 81 முல்லைத்தீவு மாவட்டம்
நேரம், பி.ப 3 மணி,
இடம்: திரு.சே.மா. செல்லத்தம்பு, பா. உ. வின் இல்லம், முல்லைத்தீவு.

23.4.81 வவுனியாமாவட்டம்
நேரம், மு. ப 9 மணி,
இடம்: திரு. த. சிவசிதம்பரம் பா. உ. வின் இல்லம், வவுனியா

23.4.81 மன்னார்மாவட்டம்
நேரம், பி.ப 3 மணி,
இடம்: திரு. பி. எஸ். சூசைதாசன், பா. உ வின் இல்லம்,

24. 4. 81 யாழ் மாவட்டம்
நேரம், மு.ப 10 மணி,
இடம்: திரு. மு. சிவசிதம்பரம் பா. உ வின் இல்லம்,




## குளிர்ந்தநிலவில்குளித்து...!

ஆளரவம் கேட்கும், மனம்
ஐயமுறும்! இளைஞர் கரம்
நீளும் சுழல் துவக்கோடு...
நின்றிருளில் குமரனவன்
வேழம் என ஒலி செய்வான்
வெடித்து எழும்பதில் ஒலிகள்
தோழவைன் அணைக்க வென
சுற்றமது துள்ளுமடா!

கார் இருளே நிறைந்தாலும்
கட்டியணைத் தன்புடனே
ஓர் உயிரே ஆனவனை
உளம் நிறைய வரவேற்பார்
பேரொலியே காடெல்லாம்
பெருமகிழ்வு; இன்ப வெள்ளம்!
ஊர்க்கதைகள்; நாட்டு நிலை
ஒரு கொள்ளைக் கதை கேட்பார்!

இந் நேரம் வானரங்கில்
எழுந்து நடை பயிலவரும்
பொன்னிலவு முகம் காட்டும்
பூ அல்லி இதழ் திறக்கும்
மண்ணெல்லாம் ஒளி அமுதம்
மனிதரவர் தமை மறப்பார்
பெண்ணழகி இவள் போல
பேரழகி யார் உண்டு?

குளிர்ந்த தேன் மழைக் காட்டில்
கூடி அதில் குளித்தாடி
வழிந்தோடும் ஆசையுடன்
வாலிபர்கள்! வளர்ந்தோங்கி
நெளிந்தாடும் கொடிமலர்கள்
நேரிழையை நினைவூட்ட
அழைந்ததிலே சுகம் காண்பார்
அப்பப்பா... உணர்ச்சித் தீ

களையோடு வந்த இளங்
காளையவன் பசி எண்ணி
சுளையோடு கனி நல்ல
சுவை மிக்க கிழங்கெல்லாம்
கிளையோடு தருவார்கள்!
கேளுங்கள், அவர் உள்ளம்
மழையோடு புரள்கின்ற
மண் போல ஒன்றிப்போம்!

## படை நடத்தும் பாவை

சிறைதனை உடைத்துப் பாய்ந்த
சிறுத்தையின் வீரம் கேட்டு
நிறை குட மானாள் மங்கை
நெஞ்சது இனிக்கச் சொல்வாள்;
அறைதனை விட்டேன் நானும்
அன்பனின் பணியே செய்வேன்
முறையிலா அரசைத் தூக்கி
மூலையில் வைப்போம் என்றாள்!

சொன்ன அப் பெண்ணின் வார்த்தை
சுருதியாய் நுழையக் காதில்
சின்னவள் என்றே மக்கள்
சிறிதுமே கொள்ளார் நெஞ்சில்
கண்ணினை மூடிக் கொண்டே
கன்னியின் பின்னால் போவார்
மண்ணினை வெல்லும் பெண்கள்
மறப்படைக் கிணையேயில்லை!

பெண்படை கண்டே ஆட்சி
பெரும் பயம் கொள்ளும் அந்தக்
கண்படை ஒன்றே போதும்
காலனும் விலகிப் போவான்
❋முன்படை பாயும் நேராய்
மூச்சினை இழந்தே வீழும்
என்படை அய்யோ என்று
ஏங்குவார் ஜே. ஆர். அம்மா!

வீடெலாம் பாடியாகும்
வெற்றிவேல் முழக்கம் கேட்கும்
நாடெலாம் களமே யாகும்
நற்றமிழ்க் கவிஞன் கையின்
ஏடெலாம் பரணி பாடும்
எந்தமிழ்ப் பெண்கள் கூட்டம்
கூடிலாக் கிளியே யானர்
குதூகலம் இது போல் உண்டோ?

சிறு சிறு கிராம மெல்லாம்
செந்தமிழ் வெறியே மூழ்கும்
பொறு பொறு என்றோர் எல்லாம்
புலியெனப் பாய்வார் முன்னால்
அறு அறு தலையே என்பார்
அறுபதைக் கடந்தோர் தாமும்
முறு முறுத் தெழுவார் இன்றே
முடிந்தது பகையே என்பார்!

படையதன் தலைவி, காதற்
பைங்கிளி, வீரன் பாவை
நடைதனைக் கண்டே கோழை
நரம்பினில் வீரம் ஊறும்!
தடை யெது வந்த போதும்
தாவுவீர் என்றே அந்தக்
கடை விழிப் பார்வை சொல்லும்
கற்களும் பூவாய் மாறும்! (வளரும்)

❋ பெண்கள் மார்பகம்

**கவிஞர் வாகரைவாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியப் பயணத்தின்போது இறுதிப் பயணம் ஏற்றவர்!

## 'கதிர்' அஞ்சலிக் கூட்டத்தில் தலைவர் 'அமிர்' புகழாரம்!

'எமது பிரதேசத்தின் திட்டமிட்ட குடியேற்றத்திட்டத்தை மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கிறோம்' என எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் நடைபெற்ற அமரர் கதிரவேற்பிள்ளை அஞ்சலிக் கூட்டத்தில் பேசியபோது கூறினார்.

கரிகாலன்தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

"நேர்மையும் நெஞ்சுரமும் கொண்ட தலைவரைப் பறிகொடுத்து பரிதாப நிலையில் தமிழினம் இன்று நிற்கிறது. அவரின் பிரிவைக் காணப் பொறுக்காத வானமே கண்ணீர்சிந்தி மழை பொழிகிறது. 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப் பட்டபோது அதனை எதிர்த்து காலிமுகத் திடலில் நாம்சத்தியாக்கிரகம் செய்யச் சென்றபோது அவர் பார்வையாளராகக் கலந்துகொண்டார், அன்று எமக்கு ஏற்பட்ட துன்பம் அவரது சிந்தனையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. அதன் பின்பு எமது இயக்கத்தில் அவர் தீவிரமாக இணைந்து பணிபுரிந்தார். அவர் தமிழினத்தின் நோயைக் குணப்படுத்தப் புறப்பட்ட ஓர் உத்தமப் பண்பு நிறைந்த தலைவர்.

அவருக்கும் இயக்கத்துக்கும் கருத்துவேற்றுமை இருப்பதாக கற்பனை செய்து வீண் பிரசாரம் செய்தார்கள்.

மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டபோது அதுதொடர்பாக இயக்கம் எடுத்த முடிவிற்கு அவர் கட்டுப்பட்டார். பாராளுமன்றத்திலும் வந்து இயக்கத்தின் கட்டுப்பாட்டை நிறைவேற்றினார்.

தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைக்க சிலசக்திகள் முற்



பட்ட போது எதிர்த்து நின்றார்.

வெளிநாட்டு விருந்தாளிகளுக்கு அவரதுஇல்லம் ஹோட்டலாக இருந்தது. அங்கு அவர்களுக்கு அவர் இன்னமுது வழங்கி எமதுஇனத்தின் பிரச்சினைகளையும் எமக்கு இழைக்கப்படும் துன்பங்களையும் அநீதிகளையும் எடுத்துக் கூறினார்.

அவரது சிந்தனையில் தெளிவிருந்தது. அத்தெளிவு எமக்குப் பலவகையிலும் உறுதுணையாக அமைந்திருந்தது.

பனுகொட இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் 6 மாதகாலமா நாம் வைக்கப்பட்டிருந்த போது 74 ஆண்களுடன் எனது மனைவியும் சேர்த்து 75 பேர் இருந்தோம், அச்சமயத்தில் இராணுவ வீரர்களின் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்வதைப் பார்த்து எனது மனைவி கண்ணீர்சிந்தினார். அந்நிலையின் போது அமரர் கதிரவேற்பிள்ளை அண்ணனாக விருந்து ஆறுதல் கூறினார். பண்பு நிறைந்த பெருந்தகை அவர்.

அவர் உமர்கையாமின் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து அங்கு விளக்கிக் கூறினார். புத்தர் பெருமானின் தத்துவங்களை எமக்குத்தெளிவு படுத்தினார்.

அண்மையில் என்னிடம் இந்தியாவுக்குச் செல்ல வேண்டும், டெல்லிக்குச் செல்ல வேண்டும், இனப்பிரச்சினைகள் பற்றிப் பேசவேண்டும் என்று என்னை அடிக்கடி சந்தித்துப் பிடிவாதம் செய்து கொண்டிருந்தார். இதற்காக ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்றார்.

நான் சற்றுப் பொறுங்கள் என்றேன் என்றால் பொறுக்கத் தயாரில்லை. இதனால் நான் சம்பந்தப்பட்ட ஒருவருடன் தொடர்புகொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன்.

கடைசியாக அவர் என்னைச் சந்தித்தநேரம் மிகவும்உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இனப் பிரச்சினை தொடர்பாக என்னுடன் பேசிக்கொண்டிருந்தார்.

புகையிரதத்தை பிடிப்பதற்கான நேரம் வர கொஞ்சம் பொறுங்கள் இன்னும் பேசுவோம் என்று கூறி என்னை நிறுத்தினார்.

கடைசியாகசந்தித்த அவரை அதற்குப்பின்னர் சந்திக்க முடியவில்லை.

அவர் தீண்டாமையல்ல சாதியே தமிழினத்தில் இருக்கக் கூடாதென விரும்பினார். திரு. சி. சுந்தரலிங்கம் சாதிப் பிரச்சினை தொடர்பாக சில விவகாரங்களைஎழுப்பியபோது நீதிமன்றத்தில் அவரைச் சந்தித்து குற்றவாளியாக்கிய பெருமை கதிரவேற்பிள்ளையைச் சாரும். அவர் கண்டது சாதிபேதமற்ற சமத்துவத் தமிழீழத்தை, அவர் கண்ட அக்



கனவை நிறைவேற்றுவதே அவருக்குநாம்செலுத்தும் உன்னத அஞ்சலியாகும், இயக்கத்துக்குத் தூணாக விளங்கிய அவரை இனிநாம் எங்கு காண்போம்,

இக்கூட்டத்தில் திருமலை எம்.பி. திரு. இரா. சம்பந்தன் டாக்டர் நீலன் திருச்செல்வம் திரு. ஐ. தி. சம்பந்தன் ஆகியோரும் பேசினர்.

# இயக்கச் செய்திகள்

## உணர்ச்சி பொங்க நடந்த கிராம யாத்திரை!

அம்பலவன் பொக்கணையில் கிராமயாத்திரை சென்ற 23-3-81 திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு, அம்பலவன் பொக்கணை தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை தலைவர் திரு. யோ. மார்க்குப்பிள்ளை யே.பி அவர்கள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

வலையன்மடம் அம்பலவன் பொக்கணை புதுமாத்தளன் பனமாத்தனன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த த. வி கூ அங்கத்தவர்கள் பலர் பங்கு கொண்டு இக்கருத்துரையாடலைச் சிறப்பித்தனர். முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் மங்கயற்கரசி, கிளிநொச்சித் தொகுதி உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி வண்ணை ஆனந்தன் மாவை சேனாதிராசா ஆகியோருடன் இன்னும் பல உள்ளூர் த. வி. கூ. உறுப்பினர்களும் உரையாற்றினர். எமது தொகுதி உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்கள் ஆரம்ப கருத்துரை வழங்கும் போது 1970ம் வருடம் அம்பலவன் பொக்கணை த.வி.கூ. உறுப்பினர்களை விட 1981ம் வருடம் மூன்று பங்கினர் கூடுதலாக உள்ளதைச் சுட்டிக் காட்டி இவ்வொற்றுமை வலுவுற உறுப்பினர்கள் மீண்டும் ஆர்வம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். எதிர்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் உரையாற்றும்போது, அம்பலவன் பொக்கணை கிராம சேவையாளர் பிரிவுக் கிராமமக்கள் மிக ஒற்றுமையுடன் இக்கிராம யாத்திரைக்கு ஆர்வம் காட்டியதை தாம் இதுவரை நடைபெற்ற எந்த ஒரு கிராமயாத்திரையிலும் காணவில்லையென வியந்துரைத்தார். தொடர்ந்து திரு. வி. ஆனந்தசங்கரி, வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா என்பவர்களின் கருத்துரைகளையடுத்து திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள், குறிப்பாக [illegible]களுக்காகிய பல சிறந்த கருத்துரைகளை எடுத்தியம்பினார். திரு. யோ. மாசிலாமணி திரு. சி. தம்பிமுத்து, திரு. யோ. தாவீது செல்வன் அன்ரன்குலதாஸ், திரு. க. கனகரத்தினம், திரு. யோ. அருளப்பு, திரு. த. நாகராசா, திரு. அ. சூசைநாதர் ஆகியோர் பல அபிவிருத்திவிடயங்கள் பற்றி எமது தேசிய பேரவை உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களிடமும், முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்திடமும் கேட்டார்கள். ஈற்றில் செயலாளரால் சகல பிரமுகர்களுக்கும் அம்பலவன் பொக்கணை த. வி. கூ. உறுப்பினர்களுக்கும் நன்றி நவின்றதுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

(தகவல்: மா. குணரத்தினம்)

✲

## கூட்டணி ஆதரவாளர் வெற்றி

புங்குடுதீவு பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைக்குப் புங்குடுதீவு மேற்கில் இருந்து ஓர் உறுப்பினரைத் தெரிவுசெய்வதற்காக 5-4-81ல் நடந்த தேர்தலில், தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் நீண்டகால அங்கத்தவரான திரு. ஏ. பசுபதி, எதிரணி வேட்பாளர் திரு. செல்லப்பா தர்மலிங்கத்தை 14 அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுத் தோற்கடித்து இயக்குநர்சபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார்.

## வீதிக்கு 'கதிர்' பெயர் சூட்டப்பட்டது!

ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம், நிலையத்தில் 4-4-81 மாலை சங்கத்தலைவர் திரு. க. சின்னத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின்போது, ஆவரங்கால் கொய்வலை வீதிக்கு (சிவன் வீதி) அமரர் கதிரவேற்பிள்ளைவீதியெனப் பெயர் சூட்ட வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படிச் சங்கத்தின் வருட உத்தியோகத்தர்தெரிவு கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. ஜே. எஸ். பற்றிக் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, பின்வருவோர் செயற்குழுஉறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர், திரு. க. சின்னத்துரை, துணைத் தலைவர்கள், அ. தில்லைநாதன், க. திரவியம் செயலாளர் தி. கமலநாதன், பொருளாளர் சோ. பாலசிங்கம், ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக சபா-நாகராசா அ. இராசலிங்கம், வா. பொன்னுத்துரை, சி. அரியகுட்டி, மு. பரமசிங்காரம், பொ. பரமசிவம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அமைச்சர் பொய் சொல்வாரா?

கடந்த ஆண்டு ஆடிமாதம் பொதுவேலைநிறுத்தம் எதுவும் நடைபெறவில்லையென கலவான எம்.பியின் கேள்விக்கு, அமைச்சர் ரி.பி. விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் பதில் அளித்துள்ளார்.

ஆடிமாதம் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோரில் ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்து வீதியிலே அலைந்து கொண்டிருப்பது நாடறிந்த உண்மை.

ஆனால், அமைச்சரோ மேற்கண்டவாறு பதில் கூறியுள்ளார்.

✲

## அம்பாறையில் அபிவிருத்திக்குத் தடை!

அரசாங்கத்தில் நிதிஇல்லாததினால், அம்பாறை நகர அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன.

இந்த முடிவு- அண்மையில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற மாநாடொன்றில் எடுக்கப்பட்டது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் எந்தப் பகுதியிலும் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப் படமாட்டாது என்று அரசு எடுத்த முடிவு தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் விடுதலைக் கூட்டணி எனும் விடுதலைப் பாசறையை நமக்கெல்லாம் தந்துவிட்டுச் சென்ற தந்தை செல்வா பிறந்த நாள் அன்று-

இயக்கக் கட்டுப்பாட்டை இறுதிவரை காப்பாற்றிய சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் சென்னைத் தரணியில் உயிர் நீத்த அதே நாளில்-

இருவரினதும் ஆன்மாவும் என்றுமே சாந்தி அடையக் கூடாது என்று சூளுரை எடுத்தாற் போல்-

தமிழீழ அரசியலில் ஒரு புதிய அணி தன் அசிங்கமான முகத்தைக் காட்டியிருக்கிறது. அந்த அணிக்கு-

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தமிழீழ அணி என்று பெயரும் சூட்டப்பட்டிருக்கிறது. (வீரகேசரி 31. 3. 81)

பட்டம்- பதவிகளில் பற்றில்லையென்று பீற்றிக் கொள்ளும் சிலர்- அந்த அணியின் அதிகார பீடத்தில் ஏறி அமர்ந்திருக்கிறார்கள்.

**காவி உடை- கையிலே கமண்டலம்- கழுத்திலே உருத்திராட்சமாலையாய்க் காட்சி தரும் ஒரு சந்நியாசி- காரிரவிலே காரிகை ஒருத்தியோடு கொஞ்சி மகிழ்வதைப் போல-**

பதவிகளின் பக்கமே போகாதவர்கள் நாங்கள் என்று பகிரங்கமாகவே சொல்லிக் கொண்ட மனிதர்கள்- பதவிகள்என்னும் பஞ்சணை மீது படுத்துறங்கத் துவங்கிவிட்டார்கள்.

யார் இந்தக் கபட வேடதாரிகள்?

ஓராண்டுக்கு மேலாக இயக்கத்தில் உட்பூசலை வளர்த்து- அதனை கண்ணாடித் துகள்களாக உடைத்து நொறுக்கி விடலாமென்று கனவு கண்டவர்கள்-

நாலு சுவர்களுக்குள் செய்ய வேண்டியதை நடுவீதியிலே செய்து தமிழர்களின் நாணயத்தையே சிரிப்புக்கிடமாக்கியவர்கள்-

பகைவனே பார்த்துக் கேலிபண்ணும் விதத்தில் இயக்கத்தைப்பற்றி எப்படி எப்படியோ வெல்லாம் எழுதியவர்கள்- பேசியவர்கள்- சூழ்ச்சி வலை பின்னியவர்கள்- சூதாடியவர்கள்-

இவர்கள் எல்லோரும் இணைந்தே இருக்கின்ற நாவாய் போதாதென இன்னுமொரு ஓட்டைப் படகை தமிழீழ அரசியல்கடலில் ஓடவிட்டிருக்கிறார்கள்!

தீவிரவாத அணி என்ற திருநாமத்தைச் சூடிக் கொண்டிருந்த இந்த நபர்கள்-

பயங்கரவாதிகள் என்ற பட்டம் தமக்குக் கிடைத்து விடுமோ என்ற பயத்தால்- இப்போது லேபலையே மாற்றிவிட்டார்கள்.

# ★ அணியா?

## அல்லது

# ★ பிணியா?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிராமயாத்திரைக் கருத்தரங்குகள் சிலவற்றைக் குழப்ப முற்பட்ட சிலர்- '31-3-81 க்குப் பின் பார்ப்போம்' என முழக்கமிட்டதின் காரணம் நமக்கு இப்போது நன்றாகவே புரிகின்றது.

முழக்கத்திற்கும் முளைவிட்டுள்ள அணிக்குமுள்ள தொடர்பும் நமக்குத் தெரிகின்றது.

தமிழர்க்குத் தலைமை தாங்க வேண்டுமென்று தவித்துக் கொண்டிருந்த சிலரின் ஆசையும் இதனால் நிறைவேறிவிட்டது. நமக்கும் பரம சந்தோஷமே! ஆனால்-

ஆசையை நிறைவேற்றிக் கொண்டவர்களில் ஒருவர்- தமது பத்திரிகையில் (5-4-81)-

1949ல் தமிழ்க்காங்கிரசிலிருந்து தமிழரசுக் கட்சி பிரிந்து சென்றது போல, இப்போதும் ஓர் நிலை உருவாக வேண்டுமா என்று அங்கலாய்த்திருப்பது தான் நமக்குப் புரியவில்லை.

இருக்கின்ற இயக்கத்திற்கெதிராக ஓர் அணியை பிரசவித்துவிட்டு-

இப்படியும் ஓர் கேள்வியை அவர் எழுப்புவதைப் பார்க்கும் போது-

ஆஹா... அற்புதமான நடிப்பு- சிவாஜி இந்த மனிதரிடமல்லவா நடிப்பைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லத் தோன்றுகிறது!

இது மட்டுமல்ல-

தந்தை செல்வாவின் பெயரைச் சொல்வோரை அமிர்தலிங்கம் தனியாகப் பிரிந்து போங்கள் என்று சொல்லுகிறாரே என தலையிலும் அடித்துக் கொள்கிறார்!

'தந்தை உருவாக்கித் தந்த இயக்கத்திற்கு எதிராகச் செயற்படுவோர்- அரசியல் நாணயம் கருதியாவது வேறு ஓர் அமைப்பை ஏற்படுத்திச் செயற்படுங்கள்- தயவு செய்து தந்தையின் இயக்கப் பெயரைப் பயன்படுத்த வேண்டாம்' என்று தான் தலைவர் அமிர் வேண்டுகோள் விடுத்தார்.

இதனை- வழக்கம் போல் அந்த எழுத்தாளர் தமக்கேற்ப எழுதிக் காட்ட முயற்சிக்கின்றார்-

எப்படியோ- யார் செய்த சதியோ- தமிழர் மத்தியில் இன்னுமோர் அணி தோன்றிவிட்டது.

'அணி' என்றால் தமிழில் அலங்காரம்- அழகு என்றும் அர்த்தம் உண்டு.

'அரிப்பு'க் காரணமாகச் சிலர் அவசரத்தில் பெற்றெடுத்த இந்தத் தமிழீழ அணி- உண்மையிலேயே தமிழர்க்கோர் அணி (அழகு) யாக விளங்கப் போகின்றதா? அல்லது-

இனத்தின் வரலாற்றில் அவ்வப்போது ஏற்படும் ஒற்றுமையின்மை என்னும் பிணியாக நம்மையெல்லாம் பிணிக்கப் போகின்றதா என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

நாமும் அதுவரை பொறுத்திருப்போம்!

**ஆசிரியர் பேசுகிறார்**

# 'துண்டுப் பிரசுர வீரர்கள்' தொழிலாளர் வர்க்கத்துக்குச் செய்ததென்ன?

20. 3. 81இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தொழிற்சங்கக் கூட்டத்தில் சென்ற யூலையில் பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாமல் பயந்து பின்வாங்கிய தொழிற்சங்கக் கோழைகளும் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்க்கத் திராணியற்ற கொம்மியூனிஷத் தோழர்களும் தங்கள் கையாலாகத் தனத்தைக் காட்டுதற்கும் தொழிலாளர்களை ஏமாற்றித் தமது ஆதிக்கத்தில் வைத்திருத்தற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அதன் பா. உக்களையும்திட்டித் தீர்த்திருக்கிறார்களாம். பொய்யையும் புரட்டையும் பேசித் தாங்கள் பெருவீரர்கள் என்று காட்டியிருக்கிறார்கள். தொழிலாளரின் உழைப்பிலே பிழைக்கும் இந்தத் துண்டுப்பிரசுர-சுவரொட்டி- வாய்ச்சொல் வீரர் குறிப்பிடும் நிலையங்களில் நடக்கும் அநியாயங்களை புறக்கணிப்புக்களை எதிர்ப்பதற்கு மேடைப்பேச்சுக்களை விட வேறென்னசெய்தார்கள்? செய்யப் போகிறார்கள்? வீரசிங்க மண்டபத்தில் இந்தச் அசகாய சூரர்கள் பேசியதைக் கேட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கத்தவரான தொழிலாளி ஒருவர் எமக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பகுதியைக் கீழே காண்க.

"ஐயா,

அபிவிருத்தி, அபிவிருத்திச் சபையென்று கூக்குரலிடும் எமது தேசியப்பேரவை உறுப்பினர்கள் வடபகுதியிலுள்ள அபிவிருத்தித் திட்டங்களான சீநோர், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய இரண்டொரு தொழில் நிறுவனங்களில் அபிவிருத்திக்கான அக்கறை காட்டாது கண்மூடிகளாய் இருப்பதன் காரணமென்னவென்று 20. 3. 81ல் வீரசிங்கமண்டபத்தில் நடைபெற்ற தொழிற் சங்கக் கூட்டத்தில் பகிரங்கமாகக் கேட்டுள்ளனர்.

சீநோர் நிறுவனத்தின் நிர்வாக சபையில் இரண்டு நிர்வாகஅங்கத்தவர் பதவிகளை எமது கட்சிக்காரர்கள்.(த. வி. கூட்டணி) எதிர்பார்த்திருப்பதாலேயே அரசினதும் சீநோர் நிர்வாகத்தினதும் சர்வாதிகாரப் போக்கையும் தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளையும் கண்டும் காணாதவராய் இருக்கிறார்களெனக் கதை பிறந்து பகிரங்கமேடை வரை அரங்கேறியுள்ளது.

த. வி. கூட்டணியினரே நிர்வாக உறுப்பினர் பதவிகளை எதிர்நோக்குகிறார்களெ

**************

## ● "கதிரவன்" ●

**************

னத் துணிந்து கூறத் தைரியம் அற்ற தொழிற்சங்கவாதிகள் தமிழினத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற அரசியற் கட்சியெனச் சுற்றி வளைத்துக் கூறுகின்றனர். இதனைத் துணிந்து சொல்லத் தைரியமற்ற கையாலாகாதவர்கள் எப்படித் தொழிலாளர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பர் என்பது புரியாத புதிர்.

ஆகவே சீநோர் நிறுவனத்தின் அழிவுப்பாதையிலிருந்து அதனையும் அதனை நம்பிவாழும் தொழிலாளர்களையும் காப்பாற்றுவதற்கு பாராளுமன்ற மட்டத்திலோ வேறு எந்த வழியிலோ ஆவன செய்து கையாலாகாத தொழிற்சங்கங்களின் வாயை அடைத்து வைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அந்தத் தொழிலாளத் தோழர் எமக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சீநோர் நிறுவனத்திலுள்ள தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இரு தொழிற்சங்கத்தினரும் 1979ல் கடற்றொழில் அமைச்சர் காரைநகரிலிருந்த சீநோர் தலைமை அலுவலகத்தைக் கொழும்புக்கு மாற்றும் பொழுது என்னசெய்தார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலாளர்களை நீக்கிவிட்டு அமைச்சர் தமது வென்னப்புவா தொகுதியிலுள்ள பலரை யாழ்ப்பாணத்திலுள்ளசீநோர் தொழில் நிலையங்களுக்கு நியமித்த பொழுது இவர்கள் மூச்சுக் கூட விடவில்லையே!

15. 12. 79 தொடக்கம் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து பாராளுமன்றத்திலும் வெளியேயும் கடற்றொழில் அமைச்சருடன் நடத்திய போராட்டத்தைப்பற்றிய வரலாறு 20, 27ம் திகதி உதயசூரியன் இதழ்களில் வெளிவந்திருப்பதை இவர்களைப் படித்துப் பார்க்குமாறு கேட்கிறோம். குருநகரிலிருந்து வேலைநீக்கஞ் செய்யப்பட்ட செய்யப்படப் போகின்ற தொழிலாளர்கள் யாழ்ப்பாணப் பா. உவிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தோடும் அமைச்சோடும் தொடர்பு கொண்டு சில நடவடிக்கைகளை எடுத்துளர்.

அடுத்த அமர்வின் போது பாராளுமன்றத்துக்கும் இப்பிரச்சினையை கொண்டு செல்லுதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள. நிலைமை திருந்தாவிடின் நேரடிப் போராட்டத்தையும் நடத்துவது குறித்து ஆராயப்படுகிறது. சீநோர் நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்கள் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியிலே சேர்ந்து தங்கள் உரிமைக்கு சிங்கள அமைச்சரின் சீரழிப்புக்கு சிங்களவரைச் சீநோரிலே புகுத்தும் சூழ்ச்சிக்கு மாறாகப் போராட முன்வரல் வேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாத்தறைக்கு அறுபத்தைந்து கோடி மட்டக்களப்புக்கு நாற்பது இலட்சம்

## வடக்கே வரும் பெஸ்டஸ் பெரேராவுக்கு வரையும் பகிரங்கக் கடிதம்:

(3)

ஆனனப்பட்ட பிரதமர்கூட தம்முடைய "பாச்சா" பலிக்காமையால் யாழ்ப்பாண மக்கள் அறிவுடையவர்கள் என்று புகழ்மாலை சூட்டிவிட்டுப் போய்விட்டாரே!

எனவே யாழ்ப்பாணமக்களைத் தொடர்ந்து ஏமாற்றலாம் என்று எண்ணி இங்கே வர வேண்டாம். உங்கள் அரசாங்கத்துக்கு எங்கள்மக்களும் மக்களின் பிரதிநிதிகளும் விடுத்த வேண்டுகோள்களை நிறைவேற்றி விட்டு சுட்டிக்காட்டிய குறைகளை நீக்கிவிட்டுப் பின் வாருங்கள். இன்பம் போன்ற இளைஞர்கள் பலரின் உயிரைப் பலி எடுத்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதை விரைவுபடுத்திச் செய்துவிட்டு வாருங்கள். இவ்வாறு செய்யாமல் எங்கள் மக்கள் எடுப்பார்கைப் பிள்ளைகள் என்று எண்ணிவந்தால் உங்கள் வருகையைப் பகிஷ்கரிக்கும் பேரியக்கத்துக்கு வித்திடுவீர்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியுளது.

கடற்றொழில் அமைச்சர் அவர்களே! யாழ்ப்பாணத்தில் இருந்த சீநோர் அபிவிருத்தித் திட்ட தலைமை அலுவலகத்தைக் கொழும்புக்கு மாற்றிச் சீநோரின் செயற்பாடுகளில் நேரடியாகத் தலையிட்டு அதனை நட்டத்திலியங்கச் செய்து இன்று சீநோரில் வேலைசெய்யும் நூற்றுக்கணக்கான ஊழியர்களை வேலைநீக்கம் செய்யும் நிலைமையை உருவாக்கியதற்கு நீங்களும் உங்கள் அமைச்சின் செயலாளருமன்றோ பொறுப்பானவர்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மாற்றிய சீநோர் தலைமைஅலுவலகத்தை மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திருப்பி அனுப்புவீர்களா? சீநோர் வடபகுதியில் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் இனிச் செயற்படுத்தாது. ஆகையால்இலங்கையின் ஏனைய மூன்று பகுதிகளுக்கும் பிறநாட்டு பண உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதைப் போல வடபகுதிக்கும் பிறநாட்டு கடனுதவியுடன் அபிவிருத்தித் திட்டத்தை வகுத்துச் செயற்படுத்து வீர்களா? வடபகுதியில் திறமையாக இயங்கிவந்த சீநோர் நிறுவகம் இன்று வடபகுதியில் தனது செயற்பாடுகளைக் குறைப்பதற்கு உங்கள் தலையீடே காரணம் என்பதை உங்களால் மறைக்கவோ மறுக்கவோ முடியுமா?

அமைச்சர் பெஸ்ரஸ்பேரேரா அவர்களே! யாழ் மாவட்டத்திற்கு இணைப்பு அமைச்சராக நீங்கள் நியமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே ஏனைய அமைச்சர்களிடம் கேட்கும் கேள்விகளையும் அவர்கள் உடனே செய்யவேண்டிய பணிகளையும் உங்களுக்கு வழிப்படுத்துகிறோம்.

தமிழ் ஈழத்திலும் சிறப்பாக யாழ் மாவட்டத்திலும் உள்ள பெரும் பிரச்சனை ஆசிரியர் பற்றுக்குறையாகும், குறைந்தது 5000 தமிழ் ஆசிரியரையாவது நியமித்துவிட்டு உங்கள் அமைச்சர் படையுடன் இங்கு வருவது பொருத்தமானது. உங்கள் சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி தொடங்கி இன்றுவரையும் ஒரு சிங்களப்பாடசாலைக்கு மூன்று ஆசிரியர்களைப் புதிதாக நியமித்த உங்கள் அரசாங்கம் தமிழ் பாடசாலைக்கு சராசரி ¾ ஆசிரியர்கள் வீதம் நியமித்திருக்கும் பெரும் புறக்கணிப்பை எந்தச் சமாதானம் கூறியும் சமாளிக்க முடியாது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்!

இந்தப் புறக்கணிப்பை இன்னும் விரித்து விளக்க வேண்டுமானுல் 4 சிங்களப் பாடசாலைகளுக்கு 12 ஆசிரியர்களை நியமித்துவிட்டு 4 தமிழ்ப்பாடசாலைகளுக்கு 3 தமிழ் ஆசிரியர்களை நியமித்திருக்கிறது உங்கள் அரசாங்கம். சிங்களத் தொகுதி இரண்டிற்கு 1436 ஆசியயர்களை நியமித்த உங்கள் அரசாங்கம் இலங்கை முழுவதும் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு 1518 ஆசிரியர்களை மட்டுமே நியமித்துளது. இது நியாமா? நீதியா?

சிங்களப்பட்டதாரிகள் 385 பேரை ஆசிரியர்களாக நியமித்த உங்கள் சிங்கள அரசாங்கம் தமிழ்ப்பட்டதாரிகள் ஒருவரையும் இன்னும் நியமிக்கவில்லையே. இதற்கு எப்படிச் சமாதானம் கூறமுடியும்? இந்தப்புறக்கணிப்பை எப்போது தீர்க்கப்போகிறீர்கள் என்பதைக் கூறுங்கள்.

## இதற்குபெயர்தான் இனசமத்துவமா?

மாத்தறையில் உருவாகும் உருகுணைப் பல்கலைக்கழகத்திற்கு 65 கோடி ரூபாவும் மட்டக்களப்பு மாட்டத்தில் வந்தாறுமூலையில் நிறுவப்படும் பல்கலைக்கழகத்திற்கு 40 லட்சம் ரூபாவும் ஒதுக்கிவிட்டு என்னமுகத்துடன் இங்குவரப் போகிறீர்கள்.

வந்தாறுமூலையில் உள்ள மகாவித்தியாலயக் கட்டடத்தைப் பல்கலைக்கழகத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்தைக் கைவிட்டு மாத்தறையில் கட்டப்படும் பல்கலைகழகக் கட்டடங்களைப் போன்ற மட்டக்களப்பு பல்கலைக்கழத்தையும் கட்ட இனிமேலாவது நடவடிக்கை எடுப்பீர்களா?

இலங்கையில் வீடமைப்பு அதிகாரசபை கட்டும் ஒரு லட்சம் வீடுகளில் கம்பஹா மாவட்டத்தில் 12 ஆயிரம் வீடுகள் கட்டப்படுமென கம்பஹா மாவட்ட அமைச்சர் கூறியதாக இலங்கை வானொலிச் செய்தி கூறுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலே பதினையிரம் வீடுகளையாவது கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துவிட்டு அதன் பின் இங்கு வாருங்கள்.

சிலதொகுதிகளில் இரண்டு முன்று மாதிரிக்கிராமம் நிறுவிய உங்கள் சிங்கள ஆட்சி யாழ்ப்பாண மாவட்டத்திலே ஒரே ஒரு மாதிரிக்கிராமத்தை நிறுவியுள்ளது. இங்கு தொகுதிக்கு ஒரு மாதிரிக்கிராமத்தையாவது இந்த ஆண்டுமுடிவதற்குள் நிறுவுதற்கு வேண்டிய உறுதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதெனில் ஏன் நிங்கள் இங்கு வரவேண்டும்.

வேலைநிறுத்தம் செய்த நூற்றுக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்களை மாதக்கணக்காக நடுத்தெருவில் தவிக்கவிட்டு வேடிக்கை பார்க்கும் நிலையைக் கைவிட்டு அவர்கள் எல்லோருக்கும் மீள வேலை கொடுத்து அவர்களை வாழ வைத்துவிட்டு இங்கு வருவதைப் பற்றிச் சிந்தியுங்கள்.

தமிழ்ப்பகுதிகளிலே கடமையாற்றும் தமிழ் ஊழியர்களுக்குச் சிங்களம் வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தும் உங்கள் யதேச்சாதிகார நிபந்தனைகளை நீக்கி, தமிழ்பகுதிகளில் வேலை செய்யும் தமிழ் உத்தியோகத்தர் எவருக்கும் சிங்களம் தேவையில்லை என முடிவு செய்து நடைமுறைப்படுத்திவிட்டு வாருங்கள்.

சிங்கள மொழித்தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலையைக் கொடுத்துவிட்டு வந்தால் தான்; நீங்கள் சமசரம் சமத்துவம் இங்கே பேசமுடியுமென்பதை நாங்கள் சொல்லியா நீங்கள் அறியவேண்டும்.

தமிழ் தெரியாமையால் "இறங்கடா, ஏறடா, நில்லடா" என்று நாள் தோறும் தமிழ் மக்களைக் கேட்டுச் சிறுமைப் படுத்தும் சிங்களப் பொலிசார் எல்லோரையும் இங்கிருந்து சிங்கள நாட்டிற்கு அனுப்பிவிட்டு தமிழ ஈழத்திற்கு வாருங்கள்.

தமிழ் ஈழத்தில் கடமை பார்க்கும் தமிழ் தெரியாத உத்தியோகத்தர் எல்லோரையும் மாற்றிவிட்டுத் தமிழ் தெரிந்தவர்களை நியமித்துவிட்டுப் பின்னர் தமிழ் ஈழம் வருவதைப்பற்றி சிந்தியுங்கள்.

## 'பச்சை'யை ஒதுக்குவோம்!

### அரசு எம். பி. அறைகூவல்

கடந்த ஜூலை மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்தோரில் ஒருபகுதியினருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. ஒருபகுதியினருக்கு இன்னும் வேலை வழங்கப்படவில்லை. வேலை இழந்தோர் வேதனையால்துடிக்கின்றூர்கள். அவர்களது குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன.

இந்த விஷயத்தில் நாம் பச்சை வர்ணத்தை ஒதுக்கிவிட்டு, மனிதாபிமான முறையில் நடந்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுவோம்.

இவ்வாறு, ஐ. தே. க. எம். பி. திரு. தயா வலகம்பாகுவே நாடாளுமன்றத்தில் அரசுக்கு இடித்துரைத்தார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

வேலையைத் திரும்பப் பெற்றவர்கள் பாக்கிச் சம்பளத்தையும் பெற்றுள்ளார்கள். இனி வேலை வழங்கப்படுவோருக்குப் நாம் பாக்கிச் சம்பளத்தையும் வழங்கியே ஆகவேண்டும். அவர்களுக்கு வேலை வழங்காமல் எவ்வளவு காலத்துக்கு வைத்திருப்பது? நாம் எப்படியும் வேலை வழங்கியே ஆக வேண்டும். வழங்குவதை இப்போதே வழங்கினுல் என்ன?

## குழம்புகிறுர்; குழப்புகிறுர்!

தலைவர் அமிர் 'உதயசூரியன்' இதழில் (7-2-81) எழுதிய கட்டுரையில், குறிப்பிட்ட ஒரு முக்கியமான வாசகத்தை வேண்டுமென்றே திரித்து எழுதிவிட்டு, அந்த வாசகமும் தான் எழுதியதும் ஒரே கருத்தையே கொண்டவை என்று மீண்டும் சுதந்திரன் ஏடு (5-4-81) குதர்க்கம் செய்துள்ளது. சுதந்திரனின் இந்த ஈனத்தனமான செயல் தலைவர் அமிரை மட்டுமல்ல - தமிழ்ப் படித்தவர்கள் அனைவரையுமே அவமதிப்பதாகும்.

தலைவர் அமிர் தமது கட்டுரையில் எழுதிய அந்த வாசகம் இதுதான்:-

**இந்திரா அம்மையார் பேசும்போது தமிழக முதல்வரை விழிக்கத்தானுமில்லை.**

இதன் பொருள் என்ன?

(மதுரை மாநாட்டில்) திருமதி இந்திரா காந்தி பேசும்போது (திரு. எம். ஜி. ஆர். அவர்களை) தமிழக் முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களே என்று விழித்துரைக்கவில்லை.

இதனை சுதந்திரன் தலைகீழாக மாற்றி ;

**" எம். ஜி. ஆரை இந்திரா ஏறெடுத்தும் பார்க்கவில்லை "**

என்று எழுதியது.

இதன் பொருள் என்ன?

திருமதி இந்திரா காந்தி, எம். ஜி. ஆரின் முகத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

எம். ஜி. ஆரை விழித்துப் பேசவில்லை என்பதற்கும், அவர் முகத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை என்பதற்கு மிடையே உள்ள வித்தியாசத்தை ஓரளவு தமிழ்ப் படித்தோர்கூட உணர்ந்துகொள்வர். ஆனுல் பேரளவு தமிழ்ப் படித்த அப்பத்திரிகை ஆசிரியரோ இரண்டும் ஒரு பொருள் கொண்டவை எனக் கூறிக் குழம்புகின்றுர்: குழப்பப்பார்க்கின்றுர்.

தலைவர் அமிரின் அக்கட்டுரை வாசகத்தைத் திரித்து எழுதியதன்மூலம் - அவருக்கும் திரு. எம். ஜி. ஆருக்கு மிடையே சுதந்திரன் சிண்டு முடியப் பார்த்தது மட்டுமல்ல - பாரதத் தலைவி பண்பாடில்லாமல் பேசிவிட்டார் என்பதுபோன்ற ஒரு நிலையையும் உருவாக்க எத்தனித்துள்ளது என்பது வெளிப்படை.

மூன்று தலைவர்களையும் ஒருவரோடு ஒருவர் மோதவிட்டுப் புதினம் பார்க்கத் துடிக்கும் சுதந்திரன் ஆசிரியர் குழம்புகிறுர்; குழப்புகிறுர்.

## துண்டுப் பிரசுர....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிப் பா. உ வும் ஊர்காவற்றுறைப் பா. உவும் பாராளுமன்றத்தில் கொடுத்த தலையிடியினுலே தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குச் சென்று அங்குள்ள ஊழியர்களைச் சந்தித்து அவர்களுக்குக் கொடுத்த உறுதிமொழிப்படி பரந்தன் தொழிற்சாலை காப்பாற்றப்பட்டுளது. அமைச்சரே "மூடமாட்டோம் அபிவிருத்தி செய்வோம்" எனப் பாராளுமன்றத்திலே வாக்குறுதி அளித்துளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ....கிராம யாத்திரை.... கிராம யாத்திரை..... கிராம யாத்திரை....

(3)

தமிழர்விடுதலைக் கூட்டணியையும் அதன் தலைமைப் பீடத்தையும் பற்றிப் பல வகையான துரோகமும், நஞ்சும், பொய்யும் கலந்த செய்திகள்பரப்பப்பட்டுள்ளன என்பதற்கு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடல் இன்றியமையாதது. சுதந்திரன் மட்டும்

## ● அனுபவங்கள்

இந்தத்துரோகச் செயல்களில் ஈடுபடவில்லை. சுதந்திரன் அடி எடுத்துக்கொடுக்கத் துரோகம் பொதிந்த பொய்ச்செய்திகள் பல சிறப்பாக வடமராட்சிப் பகுதியிலும் தீவிரவாத அணியின் தற்காலிகத் தலைமைப் பீடத்தைச் சுற்றியும் பரப்பப் பட்டுள்ளன. பருத்தித்துறைத் தொகுதியில் கிராமயாத்திரைக் கருத்தரங்கை முடித்து விட்டுத் தொண்டர்களும், தலைவர்களும் தங்கள் வாகனத்தில் ஏறும்பொழுது இளைஞர்கள் சிலர் அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தடைசெய்யும் சட்டத்தைக் கொண்டுவர வேண்டாம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தால் பயங்கரவாதத்திலீடுபட்டவர்களை அடக்கிவிடலாம், என்று உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசியதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?'' என மூன்று நான்கு பேரைக் கொண்ட ஒரு குழுவினர் கேட்டார்கள். "அப்படி ஒருவரும் பேசவில்லை, பழிவாங்கும் நோக்குடன் கற்பனை செய்யமுடியாத பொய்யை ஏன்கூறுகிறீர்கள்'' என்று கேட்டதற்கு "இந்தப் பேச்சு அஞ்சாட்டில் உளது (பாராளுமன்றப் பேச்சுப்பதிவேடு'') "புதிய பாதையில்'' வெளியிடப் போகின்றோம்,'' என்று கூறப்பட்டது. அஞ்சாட்டின் திகதியையும் கொடுங்கள் என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. பட்டதாரி ஒருவரும் இக்குழுவிலிருந்தார்.

"31. 3. 81இல் என்ன நடக்கப்போகிறது தெரியுமா?'' "31 ஆம் திகதி உங்களுக்குப் பாடம்படிப்பிக்கப்படும்'' "31ஆம் திகதி உங்களுக்கு மறுமொழி

## ● பிரச்சனைகள்

தருவோம்'' "31வரை பொறுத்திருங்கள்''... இவ்வாறு சில இளைஞர்கள் சில இடங்களில் குரல் எழுப்பினர்.

31. 3. 81 இல் தீவிர புதுக் கட்சி ஒன்று புதுத்தலைவர்களுடன் நிறுவப்படும் என்று சிலர் கதைகட்டினர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிரவாத அணியே தற்காலிக தலைவரை விட்டுவிட்டு ஒரு பெரிய தலைவருடனும், புதுப் பெயருடனும் உருமாற்றம் பெறும் எனவும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதிர்ச்சி அடையத்தக்கதாக இந்தக் கட்சியில் இரண்டொரு விபீடணர்கள் காட்சியளிப்பார்கள் எனவும் வதந்தி பரவியது. இப்பொழுது இந்த அணி தீவிரத்தைக் கைவிட்டு விட்டு, வாய்த்தவிடும் போய் அடுப்பு நெருப்பும் போன நிலைமையில் புதுப்பெயர் பூண்டு பழைய தற்காலிகத் தலைவருடன் காட்சியளிக்கிறது.

1982 ஆம் ஆண்டு தைப் பொங்கல் திருநாளில் நடைபெறப்போகும் தமிழீழப்பிரகடனம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைமை என்ன என்றும் சிலர் கேட்டனர்; இந்தக் கேள்வியைச் சிலர் எழுத்திலும் கொடுத்தனர்.

1976இல் வட்டுக்கோட்டை மாநில மாநாட்டிலே தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டது. அதன்பின்னர் தந்தை செல்வா பாராளுமன்றத்திலும் தமிழீழப் பிரகடனத்தைப் பற்றிப் பேசியுளர். சிங்கள அரசின் கொள்கை விளக்க உரைக்குத் திருத்தப் பிரேரணையாக த. வி. கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஈழத்தமிழரசுப் பிரகடனத்தை இந்தப் பாராளுமன்றத்திலும் செய்துள்ளனர்.

## ● பிரமுகர்கள்

தமிழீழத்தில், தமிழீழ அரசைப் பிரகடனம் செய்யும்முன் பிறர் ஆதிக்கத்திலுள்ள தமிழ் நிலத்தைக் கைப்பற்றுதற்கும், அதனைக் காப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும், வெளிநாட்டு அரசுகளின் அங்கீகாரத்தையும், உதவியையும் பெறத்தக்க நிலைமைஉருவாக்கப்படல் வேண்டும். இவற்றைச் செய்யாமல் வெறும் சொற் சிலம்பத்தினால் தமிழீழ அரசை எவராலும் நிறுவமுடியாது என்று இந்த வினாவுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது.

ஒரு கலந்துரையாடலின் போது ஓர் அன்பர் பின்வரும்

## ● அபிப்பிராயங்கள்

கேள்வியைக்கேட்டார்; பாலர் பள்ளிக்கூடமும் கட்டித்தர மாட்டோம்; வீதியும், ஒழுங்கையும் திருத்தித்தர மாட்டோம்.; உரிமையைப் பெற முயல்வோம்; தமிழீழத்தை மீட்கப்போராடுவோம் என்று சென்ற தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பேசியவர்கள் இன்று அபிவிருத்தி பேசுவது பொருத்தமா? முறையா?

இதற்குப் பின்வருமாறு மறுமொழி கூறப்பட்டது."சென்ற தேர்தல் கூட்டங்களில் மட்டுமல்ல, இணைப்பாட்சி(சமஷ்டி) கேட்டகாலத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டங்களில் எல்லாம் இவ்வாறு தான் பேசப்பட்டது. தமிழீழத்துக்குப் பதிலாக இணைப்பாட்சி அப்பொழுது முன்வைக்கப் பட்டது. எனினும், தந்தைசெல்வாவின் காலத்திலும் அபிவிருத்திவேலைகளிலும் ஈடுபட்டிருந்தோம். இலட்சியத்துக்காகவும் போராடிக் கொண்டிருந்தோம்.

இதைப் போலவே, இப்பொழுதும் இலட்சியத்துக்காகவும், அபிவிருத்திக்காகவும் தான் அயராது உழைக்கிறோம். தேர்தல் கூட்டங்களிலே தங்கள் கிராமங்களில் செய்யப்பட வேண்டிய பல அபிவிருத்தி வேலைகள் பற்றியும் செய்யப்படாத வேலைகள் குறித்தும் மக்கள் பேசினார்கள்; துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டார்கள்; என்பதை எவரும் மறுக்கமுடியாது. எனவே, இவர்களுக்கு அபிவிருத்தியிலும், இலட்சியம் தான் முக்கியம் என்பதை நன்கு வற்புறுத்தவே இவ்வாறு ஒரு தலைமுறைகாலமாகப் பேசி வருகிறோம். அபிவிருத்திக்காக எங்கள் தனியாட்சிக்கொள்கையை எக்காலத்திலும், எந்நிலையிலும் விட்டுக்கொடுக்க மாட்டோம்.எங்கள்ஆட்சியை நிறுவும் வரை மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் கிராமயாத்திரைக் கலந்துரையாடல்களிலும் அவர்கள் நன்றாக எடுத்துக்காட்டியுள்ளனர்.

எங்கள் ஆட்சியை நிறுவுதற்கு எங்கள் நிலத்தைக் காப்பாற்றவேண்டும். மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மூலம் நிலத்தைக் காப்பாற்ற வாய்ப்பு ஏற்படும் என்று எண்ணுகிறோம். இதனாலேயே அச்சபைச் சட்டமூலத்தை ஆதரித்தோம்.

---




## அபிவிருத்திச் சபையை ஏற்றது சரியே!

அன்புள்ள ஆசிரியர்,

உதயசூரியனை படிப்பதில் நான் அக்கறை காட்டி வருகின்றேன். மாவட்ட அபிவிருத்திச்சபையை த. வி. கூ. ஏற்றது சரி என்பது என் பக்கக்கொள்கை. மகாத்மா காந்தி வெள்ளையரை எதிர்த்த போது மகாத்மாவுக்கு சார்பாக இந்திய மக்களே ஒன்றிணைந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியாவை ஆட்சி புரிந்த வெள்ளைக்காரத் தலைவன் ஒரு ஒப்பந்தத்துக்கு வரும்படியும் தம்மை எதிர்ப்பதை நிறுத்தும் படியும் கூறினான். இதனை காந்தி ஏற்று எதிர்ப்பதை நிறுத்தினார். இவர் இவ்வாறு செய்ததும் இந்தியர்களில் பலர் காந்தியைத் தூற்றினார்கள். விடயம் தெரிந்த சிலர் அது சரியானது, காந்தி ஒரு போதும் பிழைவிடாதவர் என்றும் அவரைப் பின்பற்றும் படியும் கூறினர். ஆனால் பெரும்பான்மையோர் காந்தியை எதிர்த்தனர். காந்திக்குக் கொடும்பாவி எரித்தனர். ஒரு சமயம் காந்தி கூட்டத்தில் பேசிய போது குண்டெறிந்தார்கள். ஆனால் காந்தியோ கவலைப்படவில்லை. ஒப்பந்தத்தைச் செய்ய காந்தி முற்பட்ட போது வெள்ளைக்காரத் தலைவன் காந்தியை ஏமாற்றி ஒப்பந்தம் இல்லை என்றுவிட்டான். காந்தி மீண்டும் வெள்ளையரை எதிர்ப்பதில் தீவிரம் காட்டினர். மக்க[illegible] தான் ஏன் வெள்ளையரை எதிர்ப்பதில் முன்பு அக்கறை காட்டவில்லை எனவிளக்கினர். அகிம்சையின் போதனையை விளக்கினர். அதன்பின் மக்கள் தமது அறியாமையை எண்ணிக் கவலையுற்றனர். தமது பெரும் பிழையை எண்ணிக் கவலையுற்றனர். காந்தியின் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டனர். மன்னிப்பதும் அகிம்சையின் நோக்கங்களில் ஒன்று எனத் தெரிந்த காந்தி அவர்களுக்கு மன்னிப்பளித்தார். அதே போன்றே அரசாங்கம் தந்த மாவட்டஅபிவிருத்திசபையினைப் பெற்றுள்ளோம் அரசாங்கம் ஏமாற்றுகிறது எனக் கண்டால் அதைத் தூக்கியெறிவோம். இன்று அரசியல் வாதிகள் சிலர் மாவட்ட அபிவிருத்திச் சபையினை ஏற்றது பிழை எனக் கூறி கறுப்புக் கொடியும், கொடும்பாவியும் எரிக்கின்றனர். இவ்விதம் செய்வது அகிம்சையை சோதிப்பது போலவேயிருக்கிறது.

எனவே அகிம்சை வழியில் செல்பவர்கள் இப்படியானவர்களை விலக்கிவிட்டு நேர்மையான வழியிலே செல்ல வேண்டும்.

இப்படிக்கு
தேனு

பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குப்பைகளைக் கிளறும் கோழிகள்!

"கடந்த ஆட்சிக்காலத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நடவடிக்கை எடுத்த அமைச்சர்கள் பற்றி விசாரிக்க தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பது தொடர்பாக பிரதமர் சமர்ப்பித்துள்ள பிரேரணை தேவையற்றது விஷமத்தனமானது. இப்பிரேரணையை தமிழர்விடுதலைக்கூட்டணிஎதிர்க்கிறது. உத்தேசதெரிவுக்குழுவில் எமது கட்சியும் அங்கம்வகிக்கவும் மாட்டாது.'' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார். திருஅமிர்தலிங்கம்பேசுகையில் கூறியதாவது:

"நான்குஆண்டுகளுக்குமுன் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசின் பழைய குப்பைகளை மீண்டும் கிளற இன்றைய அரசு முயற்சிப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

'கடந்த ஆட்சிக் காலத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழர் விடுதலைக்கூட்டணியும் நானும் பல இன்னல்களை அனுபவித்தோம் எமக்கு என்று இல்லாதபலகஷ்டங்கள்எமக்கு விளைவிக்கப்பட்டன. இது வரலாறு கண்ட உண்மை, இப்போது அதை மீண்டும் கிளற வேணடிய அவசியமில்லை''

---

### "உதயசூரியன்" சந்தா விபரம்

| | |
|---|---|
| **இலங்கை** | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |
| **இந்தியா** | |
| ஒரு ஆண்டு | 260-00 |

(இந்தியா தவிர்ந்த)
வெளிநாடுகளுக்கான சந்தா
25 அமெரிக்கன் டொலர்கள்

# அமரர் கதிரவேற்பிள்ளையைச் 'சுதந்திரன்' அவமரியாதை செய்கிறதா?

சுதந்திரன், மைபோட்டுப் பார்த்து, சாத்திரம் கேட்டு, நிகழ்வுகளைக்கூறும் வித்தகப் புலவர்களிடம் அறிக்கை பெற்று, அமெரிக்காவிலுள்ள போலி மின்கணணியின் கணிப்பைக் கொண்டு மெய்யைப் பொய்யாக்க முயன்று மூக்குடைபட்டபரிதாபக் காட்சியை வாசர்களுக்கும் காட்டுகின்றேம்.

20-3-81 ஆம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழுக்கூட்டம் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. கூட்டணிச் செயற்குழு உறுப்பினர் இரண்டொருவர் 18-3-81 சுதந்திரன் முற்பக்கத்தில் ''கோப்பாய் எம். பி. போல எல்லோரும் இருந்து விட்டால் விடுதலை இயக்கத்தில் முரண்பாடு வராது'' மானிப்பாய பா. உ தர்மர் கூறுகிறார்'' என்று மூன்று வரித் தலையங்கத்துடனும் திரு. கதிரவேற்பிள்ளையின் படத்துடனும் வெளியிடப்பட்ட செய்தியில் ''சில எம்பிக்களைப் பொறுத்தவரை முரண்பாடு கூடுதலாகத் தெரியலாம். திரு. கதிரவேற்பிள்ளை எம்பியைப் போல இருந்துவிட்டால் முரண்பாடு வராது'' என்று கூறியதன் அர்த்தம் என்ன என்று கேட்டார்கள். திரு. தருமலிங்கம் சில எம்பிக்களையும், அவருடைய உறவினர் என்று சுதந்திரன் இப்பொழுது கூறும் கோப்பாய் எம். பியையும் ஒப்பிட்டுப் பேசியிருந்தமையாலும் இதற்குச் சுதந்திரன் முற்பக்கத்திலே முழுமுக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தமையாலும் விளக்கம் தேவைப்பட்டது. விளக்கம் கேட்டவர்களுக்குத்தருமர் ''தொகுதியின் தேவையைக் கோப்பாய் எம்பிபோலக் கவனியாது விட்டால் எங்களுக்கும் எப்பிரச்சனையுமில்லை'' என்று கூறினர். அவர் குறிப்பிட்ட தொகுதித்தேவை எவை என்பதையும் சுதந்திரனில் வெளிவந்த தருமருடைய பேச்சு இரத்தினச் சுருக்கமாகக்குறிப்பிட்டுள்ளது.

தருமர் ஒருவருடன் குசுகுசு பேச்சு நடத்தவில்லை. பதினைந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களுக்குப் பகிரங்கமாக இதைக் கூறினர்.

**இதனைப் பொய் என்று துணிந்து கூறி மக்களை ஏமாற்ற முயலும் சுதந்திரனுக்கு இப்பொழுது மெய்கள் எல்லாம் பொய்களாகக் காட்சியளிக்கின்றனவா?**

''இந்தவிளக்கம் ''செயற்குழு அறிக்கையில் எழுதப்படுவதற்கு முன்னேடியாக உதய சூரியனில் வெளியிடப்பட்டதாகவும் தெரியவருகிறது''

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

● **கதிரவன்** ●

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

என்றும் 12-4-81 சுதந்திரன் எழுதி மக்களை ஏமாற்ற முயன்றுள்ளது. **சுதந்திரனுக்கு தெரியவருவதெல்லாம் பச்சைப் பொய்யாகவும் சொந்தக் கற்பனைச் சதியாகவுமே உள்ளன. என்பதற்கு இந்தப் பொய்யே போதிய சான்ருகும்.**

9- 3- 81 ஆம் திகதி நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 20- 3- 81 ஆம் திகதிச் செயற்குழுக் கூட்ட அறிக்கையில் இது இடம்பெறவில்லை. **எனவே சுதந்திரன் எழுதுவது எல்லாம் பொய்தான்.**

அமரர் கதிரவேற்பிள்ளைக்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எவரும் சதி செய்யவில்லை. கூட்டணியின் சுமைதாங்கியாக, முனையாக எல்லோருடைய அன்பையும் மதிப்பையும் பெற்று விளங்கிய அவரைக் கூட்டணியிலிருந்து பிரித்து விட்டால் கூட்டணித் தலைமைப்பீடத்தை அசைத்து ஆட்டி விழுத்தி விடலாம் என்று சதி செய்தவர்கள் **இன்று பிறர் சதி செய்தார்கள் என்று பேசுவது தங்கள் சதியை மறைக்கும் குள்ளநரித் தந்திரமேயாகும்.**

இவர்களின் சதி இன்று மெல்ல மெல்ல வெளியாகத் தொடங்குகின்றது. 12-4-81 சுதந்திரனில் ''அமரர் கதிரவேற்பிள்ளையின் ஆணித்தரமான கருத்து'' என்று வெளிவந்த செய்தியும் குறிப்பும் ''சதிகாரர்'' யார் என்பதை நன்கு காட்டுகின்றன.

அவர் உயிருடன் இருக்கும் பொழுது அவர் மாவட்ட அபிவிருத்திச்சபையை எதிர்த்தார் என்று கூருமல் சுற்றி வளைத்து மூடி மறைத்துப் பேசி அவருக்கும் கூட்டணிக்கும் தொல்லை கொடுத்த சிலர் அவர் அமரரானவுடன் அவர் மாவட்ட அபிவிருத்திச்சபையை எதிர்ப்பதாக எங்களுக்குச் சொன்னர்; சிண்டு முடிதற்குப் பேர் போன சுண்டங்காய் நிருபர் ஒருவர் இந்தஎதிர்ப்பை அப்பொழுதே வெளியிட்டார் என்று பற்பல கூறமுற்படுகிறர்கள்.

**அமரர் கதிரவேற்பிள்ளை தமிழினம் பெற்றெடுத்த தன்னிகரில்லாச் சான்றேன்.** அவருடைய அரும் பெருங் குணங்களைத் தமக்குச் சாதகமாக்கித் தமது சபதம், பழிவாங்குதல், கோபம் முதலியவற்றை நிறைவேற்ற முயன்றவர்களுடைய சதிகள் அவருடைய ஒப்புயர்வில்லாத் தூய்மையாலும், மனச்சாட்சிக்கு மாறுக நடவாத அரும் பண்பாலும், தமிழினத்தின்ஒற்றுமையையே அவர் குறிக்கோளாகக் கொண்டிருந்தமையாலும் வெற்றியடைய முடியவில்லை. அவர் இறந்தபின் **அவர் தமது மனச்சாட்சிக்கு அணுவளவேனும் மாறுக நடந்தார் என்று கூற முற்படுபவர்கள் மாபெருந்துரோகிகள்.** இவர்கள் அமரர் கதிரவேற்பிள்ளைக்கு மட்டுமன்றி தமிழ் இனத்துக்கும், மனித குலத்துக்குமே துரோகஞ் செய்பவர்களாவார்கள். ✻

# வெளிப்படை!

வான வீதியில்
வந்து குவிந்திடும்
வைரக் குப்பைகள் மேகம்,
மோன நிலையினில்
மொட்டுகள் அவிழ்ந்திட
மொண்டிடும் எண்ண(ம்) மோகம்
போன காலங்களில்
பொறுக்கி எடுத்திட்ட
புதுமலர் தருவது தாகம்
ஆன இடமின்றி
ஆற வழியின்றி
அலைந்திட கிடைப்பது சோகம்.

✻

ஆயிரம் மலர்களை
அள்ளி எடுத்தே
ஆக்கிட கிடைப்பது மாலை
ஆயிரம் கற்களை
அள்ளி எடுத்தே
ஆக்கிட கிடைப்பது சாலை
கோயிலும் குளங்களும்
கொள்ள அழகினை
கொட்டிக் கிடப்பது சோலை
பாயும் ஒளிக்கதிர்
படரப் பூமகள்
பாய்ந்தே வருவது காலை.

✻

நன்றியை மறந்திடா
நண்பரே மண்ணில்
நன்றி யுடைய நாய்கள்
என்றுமே பொய்தனை
எமக்குத் துணையாய்
எடுத்து உரைப்பது வாய்கள்
இன்பமே நிறைந்திட
ஈன்றோ மென்றிட
இறுமாந்து கிடப்பவர் சேய்கள்
என்னதான் துயர்களோ
எப்படி வருகினும்
ஏற்றுக் கிடப்பவர் தாய்கள்.

✻

கண்ணில் பட்டதை
களித்திட நாளுமே
கையாள வேண்டியது தெரிவு
எண்ணக் குழியினில்
எழுந்து குமுறியே
இளகிக் கிடப்பது பரிவு
மண்ணில் பிறப்பவர்
மகிழ்வுற விட்டிடா
வாழ்க்கையில் வருவது பிரிவு.
வண்ணத் தமிழ்மொழி
வளர்த்திடா கிடப்பினில்
வந்திடும் தமிழுக்கு சரிவு.

— **வ. க. பரமநாதன்**

# "தனி ஆட்சி" முறை சர்வாதிகாரம் ஆகாதா?

இலங்கை எனும் தீவில் வாழும் தமிழர்கள்--தம்மை அடிமைப்படுத்தி ஆளும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து முற்றுக விடுபட்டு-- தன்னுட்சி--தன்னரசு நிறுவும் ஒரு போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்கள்.

தமிழர்கள் தலைநிமிர்ந்து செய்யப்போகும் அந்தத் தன்னரசு -- தன்னுட்சி, தமிழீழம் என அவர்களால் ஆசையோடு ஆழைக்கப்படும் அவர்களது தாயகத்திலேயே அமையப் போகின்றது.

தமிழீழத்தில் தமிழர்களின் தமிழரசு -- தன்னுட்சி அமைந்து விட்டால் -- பிறநாடுகள் அதன் விவகாரங்களில் தலையிடமுடியாதென்பது ஓரளவு அரசியல் படித்தோராலும் உணர்ந்து கொள்ள முடியும். காரணம் -- தன்னரசு நடைபெறும் ஒரு நாடு பூரண இறைமை படைத்ததாகும்.

இதன் காரணமாகவே, அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் திரு. ஏ. ஜே. வில்சன் அவர்கள், மாவட்ட அபிவிருத்திச் சபை பற்றி எழுதிய ஆய்வுக் கட்டுரையில் **'தமிழரின் தன்னுட்சிக் கோரிக்கையின் சாரம் பலவற்றை மாவட்ட அபிவிருத்திச்சபை கொண்டிருக்கிறது'** எனக்குறிப்பிட்டார்.

இதைப்புரிந்து கொள்ளமுடியாத ஒரு பெரும் பேராசிரியர் தமது பத்திரிகையில்--

தன்னுட்சி என்பது சுயாட்சி அதாவது 'ஓட்டோனமி' தன்னுட்சி என்பது ஒருபோதும் தனியாட்சி என்ற பொருளைத் தரமாட்டாது எனக் கிறுக்கித் தள்ளியுள்ளார்.

அதாவது-- இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் பூரண இறைமையுள்ள ஓர் அரசை அமைக்கப் போராட்டம் நடத்தவில்லை-- அதற்குக் குறைந்த ஓர் ஆட்சியை அமைக்கப் போராடிச் சாகின்றனர்கள் என்று பேராசிரியர் வில்சன் கூறுவதாக அவர் மீது பெரிய **அபாண்டத்தையே** சுமத்தியுள்ளார் இந்த அரசியல் தமிழ்ப்பெரும் பேராசிரியர்.

'தன்னுட்சி'யில் 'பூரண இறைமை இல்லை' என்று அப்பெரும் பேராசிரியர் சொல்வது சரியென்றல்-- பேராசிரியர் வில்சன் குறிப்பிடும் 'தமிழரின் தன்னுட்சிக் கோரிக்கை என்பதும் பூரண இறைமை இல்லாததொன்றேயாகும்.

இது இருக்க--

'தன்னுட்சி' தனி ஆட்சி ஆகாது என வாதம்புரியும் பெரும் பேராசிரியரிடம் சில கேள்விகள்--

'தன்மானம்' என்பதை 'தனிமானம்' என்று கூறலாமா?

'தனிமானம்' என்றல் 'விசேட' மானம் என்று பொருள் படாதா?

'தனது மானம்' தன்மானம் என்பது போல--

தனது ஆட்சி தன்னுட்சி என்று சொல்வதுதானே தமிழ் இலக்கணம்?

'தனிஆட்சி' என்பது தனிமனிதன் ஒருவனின் ஆட்சி (சர்வாதிகாரம்) என்றும் கூறலாமல்லவா?

'தனிஆட்சி' 'விசேட' ஆட்சி என்றும் பொருள் தராதா?

தமிழர்கள் ஒருகாலத்தில் தனியரசு செய்தனர் என்று எழுதப்பட்ட புத்தகத்தையெல்லாம் எரிதீயில் போடலாமா?

தயவு செய்து இதற்கான பதில்களைத் தங்கள் பத்திரிகையில் தாருங்கள். தவறுனல் திருத்திக்கொள்கின்றேம் தங்களைப் போல--

'விழிக்கத்தானுமில்லை' என்ற சொற்றெடர் குறிக்கும் கருத்தும் 'ஏறெடுத்துப்பார்க்கவில்லை' என்ற சொற்றெடர் குறிக்கும் கருத்தும் ஒன்றென்று விதண்டா வாதம் புரியவே மாட்டோம். இது உண்மை!

—சாமான்யன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் எரிகின்றது!

அமரர் கதிரவேற்பிள்ளையைத் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்றக் குழுவிலுள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாறுபடுவர் என்றும்; சில பிரச்சனைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்துக்கு மாறுகக் கருத்து வெளியிட்டுள்ளார் எனவும், கோவை மகேசன் இடை இடையே எழுதிக் கூட்டணிக்குள் பிளவு இருப்பதாகக் காட்டமுயன்று வருவதைச் சுதந்திரனை வாசிக்கும் யாவரும் அறிவர்,

மருந்தாலும் தீர்க்க முடியாத தலைக்கனத்தால் ''வலன்சை'' இழந்து அவர் எழுதிய பகுதிகளில் உள்ள சூழ்ச்சியைப் புட்டுக் காட்டியது ''உதயசூரியன்'' இந்தத் தலையிடியைத் தாங்க முடியாமல் சுதந்திரன் மீண்டும் நிழலோடு போராடும்பித்தனைப் போலப் பிதற்றியுளது.

ஆட்டத்தைப்பாராமல் ஆளை ஆளைப்பார்ப்பவர்போல் உதயசூரியன் எழுதியதிலேயுள்ள பிழைகளைப் பொய்யைப் பொருத்த மற்றவற்றை காட்டித்தான் எழுதியது சரி என்று நிறுவாமல் மைபோட்டுப் பார்த்துப், கனிப்புப் பொறியை உதவிக்கிழுத்து ''ஆளைத் ஆளைத்'' தேடித் திட்டுகிறது சுதந்திரன்

அமரர் கதிரவேற்பிள்ளையைப் பற்றி எழுதும்பொழுது ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை இழிவு படுத்தும் முறையில் ஏன் எழுத வேண்டும்? ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிலே சலுகைகளுக்கு மண்டியிடுபவர்கள் யார்? சலுகைளுக்கு அமைச்சர்களின்படி ஏறுபவர் யார்? விடுதலையைப் பற்றிச் சிந்திக்காதவர் யார்? தமிழினத்தின் ஒரே ஒரு இயக்கமாகவுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தன்மானத்துக்குசவால் விடவும் அவர்கள் மக்களுக்காகச் செய்யுந் தொண்டுகளைப் பழிக்கவும் இரவல் பத்திரிகையில் பொய்யையும் புரட்டையும் நிரப்பும்கோவை மகேசனுக்கு என்ன தகுதியிருக்கின்றது? தலைக்கனம் தகுதியைக் கொடுக்குமா?

இந்த சுதந்திரன் இதழிலேயே (12-4-81 சுதந்திரன்) **''கோப்பாய் எம்பி திறமையற்றவர். கூட்டணிச் செயற்குழுவில் கூறுமாறு மானிப்பாய் பா. உ. தருமர் பணிக்கப்பட்டார்** என்ற முழுப் பொய்யும், அமரர் கதிரவேற்பிள்ளை தமது மனச்சாட்சிக்கு மாறுகப் பாராளுமன்றத்தில் அச் சட்டத்தை (மாவட்ட அபிவிருத்திச் சட்டத்தை) ஆதரித்தார் என்று படுபாதகப் புரட்டும் எழுதப் பட்டுள.

விகிதாசாரப்பிரதிநிதித்துவம் வந்தவுடன் பாராளுமன்

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

''புயலோன்''

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

றக் கதிரை கிடைக்காதா! என்ற நப்பாசையால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்தைத்தூக்கி எறிய முயன்று மூக்குடைப்பட்டவர்கள்பாராளுமன்றக்கதிரைகளை பற்றித்தான் எப்பொழுதும் பேசுவார்கள் இவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர்களின் ஒருவரும் பொருளாளரும், நியமனக்குழு உறுப்பினரும், கொள்கைக் குன்றும் கூட்டணியின் கொள்களை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்டவரும் எக்காலத்தும் மனச்சாட்சிக்கு மாறுக நடக்காதவரும், தமது உழைப்பைக் கொட்டித் தமிழரசுக் கட்சியையும் தமிழர் விடுதலைக்கூட்டணியையும் வளர்த்தவருமான அமரர் கதிரவேற்பிள்ளையைப் புகழ்வதுபோல் அவரின்சகபாராளுமன்றஉறுப்பினர்களைப் பழித்து இழிவுபடுத்தும்குள்ள நரித்தந்திரத்தைச் சுட்டிக் காட்டினல் தலைகால் தெரியாமல் சுதந்திரன் ஏன் உளற வேண்டும்.

அமரர் கதிரவேற்பிள்ளையும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களைப் போலத்தான் பாராளுமன்றப் பணிகளை செய்தார் என்பதையும் அவர்களை விட்டு அவர் தனிவழியில் செல்லவில்லை என்பதையும் எடுத்துக் காட்டினல் சுதந்திரன் ஏன் **பேயாட்டம் ஆடவேண்டும்?**

அமரர் கதிரவேற்பிள்ளையை பா. உ. பதவியில் இருந்து வெளி ஏற்றவும் தமிழர் விடுதலைக்கூட்டணியில் இருந்து பிரிக்கவும் அவரின் பெரும் குணத்தையும் எவரையும் எதிர்க்காத அவருடைய பொறுமைப்பண்பையும் பயன்படுத்தி அவர் வீட்டுக்கு அடிக்கடி சென்று அவருக்கே தெரியாமல் நாசுக்காக சூழ்ச்சி செய்த கும்பல் தனது சூழ்ச்சி பலிக்காமையால் இன்று பல கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டுத்தப்ப முயல்கின்றது. இந்தக் கட்டுக்கதையில் ஒன்று தான் சுதந்திரன் எழுதிய ''இளவழகர்'' கதை. சுதந்திரன் சுட்டிக்காட்டுவது போலக் கூட்டத்திலே கோவையையும் ஈழவேந்தனையும் பேச விடாதற்குப் பழிவாங்கச் சோடிக்கப்பட்டகதை பத்திரிகையின் செல்வாக்கைக் கூட்டணியின் தலைமைப் பீடத்துக்குக் காட்டிவைக்கிறேன்; எங்களை மதியாத கூட்டணித் தலைவர்களைத் தூக்கிவீசச் செய்கிறேன்'' என்று வீருப்பும் வீரமும் பேசித் தொழிற்படுவர்கள் அவிட்டுவிடும் பொய்களும் பாடும்வசைகளும், கொட்டும் [illegible]ட்டுகளும் எத்தனை நாள்களுக்கு நிலைக்கும்?

உதயசூரியன் முன் எழுதியதையே மீண்டும் அழுத்தப் பொறியேற்றி காட்சிக்கு வைக்க வேண்டியுளது.

**''தீர்ரவாதிகளைத் திருப்திப் படுத்த** (மாட்ட அபிவிருத்தி சபைக்கு) **இரகசியமாக எதிர்ப்புத் தெரிவுக்கும் இரட்டைநாக்குடைய தரங் கெட்டவர்கள் கூட்டணிப் பாராளுமன்றக் குழுவில் ஒருவரும் இல்லை,**

## அஞ்சலி

5. 4. 81 ஞாயிறு மாலை கூடிய த. வி. கூ. மானிப்பாய்க் கிளையின் நிர்வாககுழு திரு. எஸ். கதிரவேற்பிள்ளையின் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியதுடன் அன்னுரின் ஆத்ம அமைதிக்காக மௌன அஞ்சலியைச் செலுத்திப் பிரார்த்தித்தது.

தீர்மான வாசகம் வருமாறு:

''த. வி. கூ. மூத்த தலைவகளில் ஒருவரும் சிறந்த சிந்தனையாளரும் பேரறிவு மிக்கவருமான திரு. கதிரவேற்பிள்ளையின் மரணம் குறித்துக் கிளை அதிர்ச்சியும் மிகுந்த வேதனை[illegible]யும் அடைகிறது. அன்னுரி[illegible] ஆத்மா சாந்தியடையும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்திற்கு ஏற்பட்ட இப்பேரிழப்பைத் தாங்கும் சக்தியை அவர்களுக்கு ஆண்டவன் அருள வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறது.'' இவ்வாறு மேற்படிக் கிளையின் செயலாளர் செல்வி இ. சுப்பையாபிள்ளை தெரிவிக்கின்றுர்.

## அமிர் ஆட்சேபம்!

வடபகுதியில் பொலிஸார் பொதுமக்கள் மீது சட்டரீதியற்ற முறையில் நடந்து கொள்வது குறித்து தலைவர் அமிர், பொலிஸ்மா அதிபர் ஆனு செனவிரத்னுவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மீது பொலிஸார் சட்டரீதியற்ற முறையில் நடந்து கொள்வதைத் தாம் நேரில் கண்டதாக அமிர் தமது ஆட்சேபனையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பெண்களையும் பொலிஸ் கைது செய்கிறது

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கொலை, கொள்ளைச் சம்பவங்களோடு தொடர்புடையதாகக் கருதப்படும் பெண்மணி ஒருவரைக் கைது செய்துள்ள பொலிஸார், பின் அப்பெண்ணின் தாய், கணவர், மாமா ஆகிய மூவரையும் கைது செய்துள்ளனர்.

## புங்குடுதீவு
### த. வி. கூட்டணிக்கிளை
## அனுதாபம்

புங்குடுதீவு மத்தி த. வி. கூட்டணிக்கிளை மாதாந்தக் கூட்டம் 11-4-81 சனிக்கிழமை நடைபெற்றபோது முதலாவதாக சிந்தனைக்குரிய பெருமகனுய்த் திகழ்ந்து மண்ணில் மறைந்த கோப்பாய் பா. உ திரு. சி. கதிரவேற்பிள்ளையின் மறைவுக்கு இரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

மத்தியகிளைத் தலைவர் திரு. வே. க. சோமசுந்தரம் ச. நீ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமரர் கதிரவேற்பிள்ளையின் குடும்பத்தினருக்கு அனுதாபம் [illegible] தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


தென்னகத்தில் மிகுந்த பரபரப்பையூட்டி
வெற்றிவிழாக் கொண்டாடிய
''வெள்ளி விழா'' வண்ணச் சித்திரம்

சாந்தி -(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30

சரத்பாபு, சுமலதா, சுந்தரராஜன்,
எம். என். ராஜம்
ஆகியோர் நடித்த
பி. எஸ். வீரப்பா அளிக்கும்....

திசை மாறிய பறவைகள்
(முற்றிலும் மாறுபட்ட, திசை திருப்பமான கதை)



தமிழினத்தின் படைக்கலனுகத் திகழும்
'உதயசூரியன்' பத்திரிகைக்கு
எங்கள் வாழ்த்துக்கள்!

கணேசன் ரேடிங் கொம்பனி
167, 5-ம் குறுக்குத் தெரு
கொழும்பு - 11



எங்கள் நிலையத்தில்
உள்ளூர் உற்பத்திப் பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

ஜெயா ஸ்ரோர்ஸ்
200, போதிராச மாவத்தை
கொழும்பு - 11



உள்ளூர் உற்பத்திப் பொருட்களை
எங்களிடம்
மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்

ஆர். என். கே. ஏசன்சி
20- 22, 4-ம் குறுக்குத் தெரு
கொழும்பு - 11



சில்லறைச் சாமான்கள்
சாய்ப்புச் சாமான்கள்
எங்களிடம்
மொத்தமாகவும், சில்லறையாகவும், கிடைக்கும்

கணேசன் ரேடிங் கொம்பனி
167, 5-ம் குறுக்குத் தெரு
கொழும்பு - 11


இப்பத்திரிகை 'உதயசூரியன்' வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினரால் 17-4-1981 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org